மேற்கொண்டதன்மூலம், இடைக்கால உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஊதிய உயர்வினை வழங்க நிருவாகம் உடனடியாக ஒப்புக்கொண்டது. இதனால் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் விலக்கிக்கொள்ளப்பட்டு, 30-5-2011 முதல் பணிக்குத் திரும்பினார்கள். இரப்பர் பால் வடித்தவர்கள் தற்பொழுது ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். இதுதான் எங்கள் அம்மா ஆட்சியின் மகிமை! (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

தமிழகப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலங்களில்தான் தொழில் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் நேற்று பாராட்டிப் பேசினார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தீர்ப்பாயத்தின் தீர்ப்பின்படி தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்காத பஞ்சாலை நிருவாகங்கள்மீது சட்டப்படி நடவடிக்கை தொடர, தொழிலாளர் துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் தளவாய்புரம், ஸ்ரீபத்ரகாளியம்மன் பவர்லூம் என்ற பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழிலாளர்கள் உடனடியாகப் பணிக்குத் திரும்பினார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளி, விவசாயி என்று யாராக இருந்தாலும், அவர்கள் உரிமைக் குரல் கொடுப்பதற்கு முன்பே அவர்களது இல்லத்தில் ஒளிவிளக்கு ஏற்றி வைப்பது என் கடமை என ஆயிரத்தில் ஒருவராக வாழுகின்ற, அன்னமிட்ட கைகளுக்குச் சொந்தக்காரர்தான் எங்கள் தங்கம் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக் காலத்தில் ஆனைமலைத் தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும், வால்பாறையிலுள்ள தொழிற்சங்கங்களுக்கும் இடையே ஊதிய உயர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி மலைப் பகுதிப்

படி (அலவன்ஸ்) சட்டப்படியான பலன்களைக் கணக்கிட ஊதியமாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. படிகளே இல்லாத மலைகளில் ஏறி, பனியிலும், காற்றிலும், மழையிலும் தன்னை வருத்திக்கொண்டு பாடுபடும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் படிகளுக்குப் பயனே இல்லை என்ற நிலை மாற்றப்பட்டது. இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனைக்கிணங்க 1-7-2011 அன்று ஒப்பந்தம் ஏற்பட்டு, தொழிலாளர்களுக்குப் பயன்களை அளிக்க நிருவாகம் ஒப்புக்கொண்டுள்ளது.

கடல் அலைத் தொழிலாளிகளாம் மீனவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்திய கலங்கரை விளக்கம், நமது அம்மா அவர்கள். அம்மா ஆட்சியில்தான் சுமார் ஒரு இலட்சம் மலைத் தோட்டத் தொழிலாளர்களும் பயன் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மக்கள் நீதிமன்றம்மூலம் 56 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.81,41,389 இழப்பீடு தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் மக்கள் நீதிமன்றம் எதுவும் நடத்தப்படவில்லை. மக்கள் நீதிமன்றங்களை மதிக்கவேயில்லை. அதனால்தான், மக்களே நீதிபதிகளாக மாறி, அவர்களை சுத்தமாகத் துடைத்துத் தூக்கியெறிந்து, மகத்தானத் தீர்ப்பை புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அளித்து, மனநிறைவு கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நமது மாநிலத்தில் 4.19 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டது. "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி! சின்னஞ்சிறு கைகளை நம்பி, ஒரு சரித்திரம் இருக்குது தம்பி!" என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடல் வரிகளுக்கு ஏற்ப, 2002 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலும் ஒரு அம்சமாக சேர்க்கப்பட்டது.